JUDICIAL FORM NO.53

( See Rule 42)
Deposition of Witness
(Chapter XXXIII Code of Criminal Procedure)
IN THE COURT OFJUDICIAL MAGISTRATE, PERUNDURAI

| | | | |
|---|---|---|---|
| Calendar | | C.C.No. | **2/2010** |
| Miscellaneous | | C.M.P.No | |
| Sessions | | S T C No. | |
| Deposition of witness for | **P.W. 1** | Prosecution /Defence / Court | |
| Name | **Gurusamy** | Caste | |
| Father's Name | **Nachimuthu** | Calling | |
| Village | **Sri Raja Illam, Sakthi Nagar, Vijayamangalam** | Religion | |
| Taluk | **Perundurai** | Age | |

**Accused absent**. **Petition U/s**.317 **Cr**.**P**.**C**., **filed and allowed**.

Solemnly affirmed in accordance with the provisions of the oaths Act 1969( Central Act 44 of 1969 ) of the day of **Date 16.07.2025.**

**<u>முதல் விசாரணை</u>**

**1)** நான் மேற்கண்ட முகவரியில் குடியிருந்து கொண்டு தற்போது பெருந்துறை சரவணாபுரம் அரசு மேல்நிலைப்பள்ளியில் தமிழ் ஆசிரியராக வேலை பார்த்து வருகிறேன். சம்பவ சமயத்தில் நான் நாமக்கல் ஜேடர்பாளையத்தில் அரசு மேல்நிலைப்பள்ளியில் வேலை பார்த்து வந்தேன். என் மனைவியும் அரசு பள்ளியில் ஆசிரியராக வேலை பார்த்து வருகிறார். 17.11.2008 ம் தேதி அன்று நான் நாமக்கல் ஜேடர்பாளையம் அரசு மேல்நிலைப் பள்ளியில் தமிழ் ஆசிரியராக பணிபுரிந்ததால் காலை 5 மணிக்கு நான் வீட்டில் இருந்து பள்ளிக்கு புறப்பட்டு சென்று விட்டேன். என் மனைவி R. சசிகலா தேவி அவரும் ஆசிரியை ஆக பணிபுரிவதால் குழந்தைகளை அடுத்த வீதியில் உள்ள என் மாமியார் வீட்டில் விட்டுவிட்டு பள்ளிக்கு சென்று விட்டார். 17.11.2008 ம் தேதியன்று மதியம் சுமார் 1.30 மணியிலிருந்து 1.45 மணி இருக்கும் நான் என்னுடைய பள்ளியில் வேலை பார்த்து கொண்டிருந்த போது என்னுடைய மாமனார் எனக்கு போன் செய்து என்னுடைய வீட்டில் கதவை உடைத்து திருடு போயிருப்பாதாக உள்ளது என கூறியதால் நான் என்னுடைய வீட்டிற்கு

பள்ளியில் இருந்து புறப்பட்டு வந்தேன் என் மனைவிக்கும் என் மாமனார் தகவல் சொல்லியதால் அவரும் வீட்டிற்கு வந்தார்.

2. நான் வீட்டிற்கு வந்து பார்க்கும் போது எங்கள் வீட்டின் முன்பக் கிரில் கேட் உடைக்கப்ட்டிருந்தது எங்கள் வீட்டின் மெயின் டோர் மரக்கதவும் உடைக்கப்பட்டு இருந்தது. வீட்டின் உள்ளே சென்று பார்த்த போது பீரோ திறந்த நிலையில் இருந்தது. பீரோவில் இருந்த துணிகள் எல்லாம் ஆங்காங்கே இறைத்து கிடந்தது. பீரோவில் வைத்திருந்த நகைகள், 13 ½ பவுன் யாரோ திருடி சென்று விட்டார்கள். பச்சைக் கல் வைத்த ஆரம் 5 ½ பவுன். பச்சைக்கல் தோடு ½ பவுன், கோதுமை டிசைன் செயின் 3 பவுன் , GD என்று இன்சியல் போட்ட மோதிரம் 1 பவுன், மற்ற சிறு சிறு நகைகளும் இருந்தது. மொத்த நகைகள் காணாமல் போனது 13 ½ பவுன் ஆகும்.

3. பெருந்துறை காவல் நிலையத்தில் தகவல் கொடுத்ததின் போரில் அவர்கள் காணாமல் போன பொருட்கள் என்னவென்று எழுத்து மூலமான புகார் கொடுக்குமாறு சொன்னதால் காணாமல் போன பொருட்கள் பற்றி கண்டுபிடித்து கொடுக்குமாறு புகாரை கொடுத்தேன். என்னிடம் காட்டப்படும் புகார் நான் கொடுத்த புகார் ஆகும். அசல் புகார் CC No. 240/2009 ல் ஏற்கனவே குறியீடு செய்யப்பட்டுள்ளது. தற்போது **சான்றிட்ட நகல் அ.சா.ஆ.1 ஆக குறியீடு செய்யப்படுகிறது.** என்னை பெருந்துறை காவல் ஆய்வாளர் அவர்கள் விசாரிக்க நடந்த விவரங்களை கூறினேன்.

4. 04.04.2009 ம் தேதியன்று பெருந்துறை காவல் நிலையத்திற்கு வந்து காணாமல் போன நகைகள் கண்டுபிடிக்கப்பட்டதாக தகவல் கிடைக்கப்பெற்றதின் பேரில் நகைகளை அடையாளம் காட்டினேன். நீதிமன்றத்தில் மனு செய்து நகைகளை பெற்றுச் சென்றேன். 04.04.2009 ம் தேதி பெருந்துறை காவல் நிலைய ஆய்வாளர் அவர்கள் விசாரித்து வாக்குமூலத்தை மறுபடியும் பதிவு செய்தார். **பச்சைக் கல் வைத்த ஆரம் 5 ½ பவுன். பச்சைக்கல் தோடு ½ பவுன், கோதுமை டிசைன் செயின் 3 பவுன், பச்சைக்கல் மோதிரம் ஆகியவை அ.சா.பொ. 1 முதல் 4 வரை எதிரி தரப்பில் ஆட்சேபனையுடன் குறியீடு செய்யப்படுகிறது.** இத்துடன் நான் மனு தாக்கல் செய்து பெற்றுக் கொண்ட 3 மோதிரங்கள் காணாமல் போய்விட்டதால் தற்போது நீதிமன்றத்தில் ஒப்படைக்கவில்லை. (மேற்படி அ.சா.பொ. 1 முதல் 4 வரை புகார்தாரர் மனு தாக்கல் செய்து இடைக்கால பராமரிப்பில் பெற்றுக் கொண்டுள்ளதை ஆஜர் செய்துள்ளார்.

அ.சா.பொ. 1 முதல் 4 வரை உள்ளவற்றை மனுதாரர் வசம் இடைக்கால பொறுப்பில் திரும்ப ஒப்படைக்கப்படுகிறது)

**எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை**

**1)** என் வீட்டுக்கு தென்புறமாக செல்வம் வீடு உள்ளது என்றால் சரிதான். வடபுறமாக வாசு என்பவரின் வீடு சம்பவ சமயத்தில் கட்டிட வேலை நடந்து கொண்டு இருந்தது என்றால் சரிதான். சம்பவத்தின் போது அங்கு எத்தனை நபர்கள் கட்டிட வேலை செய்து கொண்டு வந்திருப்பார்கள் என்றால் சுமார் 15 நபர்கள் வேலை செய்து கொண்டு இருப்பார்கள். கட்டிட வேலை நடந்து கொண்டு இருந்த இடத்திற்கும் என் வீட்டுக்கு எவ்வளவு அடி தூரம் என்றால் சுமார் 60 அடி தூரம் இருக்கும். அங்கிருந்து பார்த்தால் என் வீடு தெரியும் என்றால் சரிதான். என் வீட்டுக்கு கிழப்புறமாக சாலை செல்கிறது என்றால் சரிதான். சாலையின் கிழப்புறமாக மணிவண்ணன் என்பவரது வீடு உள்ளது என்றால் சரிதான்.மணிவண்ணன் வீட்டிலிருந்து பார்த்தால் என் வீடு தெரியும் என்றால் சரிதான். அந்த சாலை போக்குவரத்து நிறைந்த சாலை என்றால் சரிதான்.

2. என் மாமனார் சம்பவ இடத்துக்கு வந்து பார்த்துவிட்டு சேலைகள் கலைந்து இருப்பதை பார்த்துவிட்டு எனக்கு தகவல் தெரிவித்தார் என்றால் சரிதான். என் மாமனார் பெயர் ரங்கசாமி. என் மாமனார் தகவல் சொல்லி எத்தனை மணிக்கு நான் வீட்டுக்கு வந்தேன் என்றால் மாலை சுமார் ஐந்து மணி இருக்கும். என் மாமனார் எனக்கும் என் மனைவிக்கும் தகவல் சொல்லிவிட்டு காவல் நிலையத்திற்கு தகவல் சொல்லிவிட்டார் என்றால் சரிதான். நான் அங்கு வரும்போது காவல் நிலையத்தினர் அங்கு வந்து விசாரணை செய்து கொண்டு வந்தார்கள் என்றால் சரிதான். நான் வருவதற்கு முன்பாகவே என் மனைவியிடம் என்னென்ன பொருட்கள் காணாமல் போனது என்று கேட்டு தெரிந்து கொண்டார்கள் என்றால் சரிதான்.

3. நான் வருவதற்கு முன்பாகவே என் மனைவி சம்பவ இடத்திற்கு வந்துவிட்டார் என்றால் சரிதான். என் வீட்டில் இரண்டு பெட்ரூம் உள்ளது வடபுறம் ஒரு ரூமும் தென்புறம் ஒரு ரூமும் உள்ளது என்றால் சரிதான். எந்த பெட்ரூமில் பொருட்கள்

காணாமல் போனது என்று எனது புகாரிலோ போலீஸ் விசாரணையிலோ சொல்லவில்லை என்றால் சரிதான். என்னென்ன பொருட்கள் காணாமல் போனது என என் மனைவி என்னிடம் சொல்லி நான் தெரிந்து கொண்டேன் என்றால் சரிதான். பணம் 3000 காணாமல் போனதாக சொல்லி உள்ளேன் அது எவ்வளவு தாள்கள் இருந்தது என்று புகாரிலோ போலீசார் விசாரணையிலோ நான் சொல்லவில்லை என்றால் சரிதான்.

4. போலீசார் சம்பவ இடத்தில் புகைப்படங்களை எடுத்துக் கொண்டார்கள் என்றால் சரிதான். புகார் போலீசார் சொல்ல சொல்ல எழுதிக் கொண்டேன் என்றால் சரியல்ல நானாக எழுதிக் கொடுத்தேன். அ.சா.ஆ.1 புகாரில் கடைசி இரண்டு வரிகள் வித்தியாசம் உள்ளது என்றால் சரிதான். அதை யார் எழுதினார்கள் என்றால் தற்போது நினைவில் இல்லை. 3 மோதிரங்கள் காணாமல் போனதாக சொல்லி உள்ளேன் அதற்காக காவல் நிலையத்தில் புகார் கொடுக்கப்பட்டதா என்றால் இல்லை. நீதிமன்றத்தில் இருந்து நான் பெற்று சென்ற நகைகள் வேறு களவு போன நகைகள் வேறு தற்போது நீதிமன்றத்திற்கு நான் கொண்டு வந்திருக்கும் நகைகள் வேறு என்று சொன்னால் சரியல்ல.

5. இன்று நான் நீதிமன்றத்திற்கு கொண்டுவந்துள்ள நகைகள் களவு போன நகைகள் இல்லை என்றால் சரியல்ல. களவு போன நகைகள் நான் வாங்கியதா என்றால் சில நகைகள் நான் வாங்கியது சில நகைகள் திருமணத்தின் போது பரிசாக வந்தது. களவு போன நகைகள் என்னுடையது என்பதை காண்பிப்பதற்கு போலீசாரிடம் ஆவணங்களை காண்பித்தேனா என்றால் இல்லை. நான் சொன்னது போல் எந்த சம்பவம் நடைபெறவில்லை என்றால் சரியல்ல. பொய்யாக புகார் கொடுத்து பொய் சாட்சி அளிக்கிறேன் என்றால் சரியல்ல.

**மறுவிசாரணை**

**இல்லை.**

Signature of the Witness

திறந்த நீதிமன்றத்தில் சாட்சி சொல்லச் சொல்ல, என்னால் தட்டச்சருக்குச் சொல்லப்பட்டு, அவரால் திறந்த நீதிமன்றத்தில் தட்டச்சு செய்யப்பட்டு, சாட்சிக்கு படித்துக் காண்பிக்கப்பட்டு, சாட்சியால் சரி என்று ஒப்புக் கொள்ளப்பட்டு என் முன்னால் சாட்சியின் கையெழுத்து / கைரேகை பெறப்பட்டது.

நீதித்துறை நடுவர்,
பெருந்துறை